செய்தி வெளியீடு எண்: 913 நாள்: 13.12.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 12.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் காரிமங்கலம், புவனகிரி, நெமிலி மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய இடங்களில் 10 கோடியே 47 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் – அஞ்செட்டி வருவாய் வட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் – ஆனைமலை வருவாய் வட்டம் ஆகிய புதிய வருவாய் வட்டங்களையும் துவக்கி வைத்தார்கள்.

அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாக விளங்கி, நிர்வாக அமைப்பின் முதுகெலும்பாக திகழ்ந்து, சமுதாய வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு பெரும் பங்காற்றி வரும் வருவாய்த் துறையின் பணிச்சூழலை மேம்படுத்தும் பொருட்டும், பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டும், நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, வேலூர், ஈரோடு, காஞ்சிபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 16 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிதாக கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 16.9.2016 அன்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் 2 கோடியே 61 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம்;

கடலூர் மாவட்டம் – புவனகிரி, வேலூர் மாவட்டம் – நெமிலி மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய இடங்களில் 7 கோடியே 85 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள்;

என மொத்தம் 10 கோடியே 47 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர்

குடியிருப்புக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வருவாய் வட்டத்தை சீரமைத்து, அஞ்செட்டியை தலைமையிடமாகக் கொண்டு அத்திநத்தம், கரடிக்கல், சீங்கோட்டை, வண்ணாத்திப்பட்டி, கேரட்டி மற்றும் கொடகரை ஆகிய 6 புதிய வருவாய் கிராமங்களுடன், ஏற்கனவே உள்ள 9 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி, மொத்தம் 15 வருவாய் கிராமங்கள் மற்றும் 182 குக்கிராமங்களுடன் புதிதாக உருவாக்கப்பட்ட அஞ்செட்டி வருவாய் வட்டம்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தை சீரமைத்து, ஆனைமலையை தலைமையிடமாகக் கொண்டு ஆனைமலை, மார்ச்சி நாயக்கன் பாளையம், கோட்டூர் ஆகிய 3 குறுவட்டங்கள் மற்றும் 31 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆனைமலை வருவாய் வட்டம், ஆகிய இரண்டு புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திருமதி எம். லஷ்மி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**